கன்னியாகுமரியில் கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த

த.வெ.க. நிர்வாகி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் முதல்வர் விஜய்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 25 -

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

கன்னியாகுமரியில் கல்லூரி மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தனது கட்சி நிர்வாகி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் முதல்வர் விஜய்?

சரித்திர பதிவேடு குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நிறைந்த கூடாரமாகத்தான் த.வெ.க. இருக்கிறது. முதலில் முதலமைச்சர் விஜய் அவர்கள், ஊருக்கு அறிவுரை சொல்வதற்கு முன், தனது கட்சியில் யாரையெல்லாம் சேர்த்திருக்கிறார் என்பதைச் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவிக்குப் பாதுகாப்பு வழங்கி, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பாரபட்சமின்றிச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால், மக்களுடன் இணைந்து ஜனநாயகப் போராட்டத்தின் மூலம் இந்த அரசுக்குப் பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

‘அர்னாப்’ புயல்: பழைய பல்லவியை பாடாமல்

த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 25 -

‘அர்னாப்’ புயல் வரும் நிலையில் பழைய பல்லவியை பாடாமல் த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 24.10.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது :-

சூப்பர் எல்நினோ தாக்கத்தால் தமிழகத்தில் வரலாறு காணாத வெப்பம் கடந்த மார்ச் துவங்கி அக்டோபர் 2ம் வாரம் வரை நீடித்தது. வழக்கமாக அக்னி நட்சத்திரம் முடிந்ததும் தென்மேற்கு பருவமழை சீசன் ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை நீடிக்கும். இந்த பருவமழையை நம்பி இருபோக பாசனம் மற்றும் குறுவை சாகுபடி நடக்கும். ஆனால், இந்த முறை வெயில் கொளுத்தி எடுத்ததால், தென்மேற்கு பருவமழை பொய்த்தது. இதனால் மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

பின்னர் நீர்ப்பிடிப்பில் பெய்த பரவலான மழையை தொடர்ந்து, செப்டம்பர் 1ம் தேதி தான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால் பருவம் தவறி பல்லாயிரம் ஏக்கரில் நடக்கும் நெல் சாகுபடி நடைபெறவில்லை. ஒருபுறம் த.வெ.க. அரசு அறிவித்தபடி, பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாதது, 2ம் போகம் பொய்த்தது உள்ளிட்ட காரணங்களால் தமிழக விவசாயிகள் பெரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து அரிசி வாங்கி விற்கும் சூழல் உருவானதால், சில்லரையில் அரிசி விற்பனை ரூ.80ஐ தாண்டி விற்று வருகிறது.


தினகரன்
அக்டோபர் 24, 2026 சனிக்கிழமை
அட்டன்ஷன் ‘அர்னாப்’
சூப்பர் எல்நினோ தாக்கத்தால் தமிழகத்தில் வரலாறு காணாத வெப்பம் கடந்த மார்ச் துவங்கி அக்டோபர் 2ம் வாரம் வரை நீடித்தது. வழக்கமாக அக்னி நட்சத்திரம் முடிந்ததும் தென்மேற்கு பருவமழை சீசன் ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை நீடிக்கும். இந்த பருவமழையை நம்பி இருபோக பாசனம் மற்றும் குறுவை சாகுபடி நடக்கும். ஆனால், இந்த முறை வெயில் கொளுத்தி எடுத்ததால், தென்மேற்கு பருவமழை பொய்த்தது. இதனால் மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் தண்ணீர் திறக்கப்படவில்லை.
பின்னர் நீர்ப்பிடிப்பில் பெய்த பரவலான மழையை தொடர்ந்து, செப்டம்பர் 1ம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால் பருவம் தவறி பல்லாயிரம் ஏக்கரில் நடக்கும் நெல் சாகுபடி நடைபெறவில்லை. ஒருபுறம் த.வெ.க. அரசு அறிவித்தபடி, பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாதது, 2ம் போகம் பொய்த்தது உள்ளிட்ட காரணங்களால் தமிழக விவசாயிகள் பெரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து அரிசி வாங்கி விற்கும் சூழல் உருவானதால், சில்லரையில் அரிசி விற்பனை ரூ.80ஐ தாண்டி விற்று வருகிறது.

சூப்பர் எல்நினோவால் தமிழகத்தில் வெப்பம் சுமார் 7 மாதங்களுக்கும் மேலாக நீடித்த நிலையில் தற்போது வானிலை முற்றிலுமாக மாறி குளிர்ச்சியான சூழல் உருவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமாகியுள்ளதே இதற்கு முக்கிய காரணம். இதன் காரணமாக சென்னை, மதுரை, கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி உள்ளிட்ட பல வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. மேலும், சில நாட்கள் கனமழை நீடிக்கும்; அக்டோபர் 26ம் தேதி வரை தமிழகத்தில் பரவலாக மழை பெய்யுமென வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்தொடர்ச்சியாக வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இது படிப்படியாக மாற்றமடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி, நாளை மறுதினம் (அக். 26) புயலாக மாற வாய்ப்புள்ளதால், தமிழகத்துக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த புயலுக்கு ‘அர்னாப்’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த புயல் வடக்கு ஆந்திரா - தெற்கு ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அர்னாப் என்பதற்கு வங்க மொழியில் கடல் அல்லது பெருங்கடல் என அர்த்தமாகும். இது வழக்கம்போல வைக்கும் பெயர்தான் என்றாலும், சூப்பர் எல்நினோவால் எப்படி கடும் வெப்பம் நம்மை தாக்கியதோ, அது போலவே தமிழகத்தின் ஓராண்டு மொத்த மழையை ஒரே நாளில் பொழிய வைக்கவும் செய்யும் அல்லது பெரு மழை பெய்து கடும் பாதிப்பை தரும் என்ற வானிலை ஆய்வாளர்கள் கருத்து அச்சுறுத்தி வருகிறது. மழைப்பொழிவால் பெருங்கடல் போல வெள்ளப்பெருக்கு நிகழ்ந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இதன்காரணமாக, மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. கனமழை எதிரொலியாக பல மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், ‘இவ்வளவு மழை பெய்யுமென எதிர்பார்க்கவில்லை. இப்படி பெய்தால் எப்படி சமாளிப்பது? கடந்த ஆட்சியில்...’ என்கிற ரீதியில் த.வெ.க. அரசு பழைய பல்லவியை தொடர்ந்து பாடிக் கொண்டிருப்பதால் எந்த பயனுமில்லை.

எந்தவித பேரிடர் சூழலையும் சமாளிக்கக் கூடிய வகையில், ஆயத்த ப ப ணி க ளை தீவிரப்படுத்த வேண்டும். மீட்புப்படைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மழை நீர் வாய்க்கால்களை அவசரகதியில் தூர்வார வேண்டும். அடுத்தடுத்து வரும் நாட்கள் மிக கவனமாக இருக்க வேண்டிய காலக்கட்டம் என்பதால், த.வெ.க. அரசு அதற்கேற்ற வகையில் முன்னேற்பாடுகளை, தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தை

உடனடியாக மறு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

ஒன்றிய அரசுக்கு தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம்!

புதுடெல்லி, அக். 25 -

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்து, விலங்குகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தக் கோரி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து ஒன்றிய மீன்வளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் அவர்களுக்கு அவர் அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தாவது :

அறிவியல் ஆராய்ச்சிகளைச் சீரமைப்பது ஒரு நியாயமான நோக்கமாக இருந்தாலும், அதன் பெயரில் விலங்குகள் நலனுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனப்படுத்தப்படுவதோ அல்லது சுதந்திரமான ஒழுங்குமுறைக் கண்காணிப்பு குறைக்கப்படுவதோ கூடாது. பெரிய விலங்குகள் தொடர்பான பரிசோதனைகள் உட்பட, பரந்த அளவிலான பரிசோதனைகளுக்கு நிறுவனங்களின் நெறிமுறைக் குழுக்களே ஒப்புதல் அளிக்க அனுமதிக்கும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள மாற்றம், பொறுப்புக்கூறல் மற்றும் சுதந்திரமான ஆய்வின் போதுமான தன்மை குறித்து முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது.

மேலும், வனவிலங்குகள், தெருநாய்கள் மற்றும் பூனைகளைப் பிடித்து ஆய்வகப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்த வழிவகுக்கும் விலக்குகள் குறித்தும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. கடுமையான வலி, துன்பம் மற்றும் நீடித்த பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய பரிசோதனைகள், அத்துடன் ஆய்வு நடைமுறைகள் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த கவலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த விதிகளை இறுதி செய்வதற்கு முன்பாக ஒரு முழுமையான மறுஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அழகுசாதனப் பொருட்கள் சோதனை, மருத்துவக் கல்வி மற்றும் சில மருந்துப் பரிசோதனை முறைகளில், விலங்குகளைப் பயன்படுத்தாத மாற்று வழிகளை அங்கீகரிப்பதில் இந்தியா ஏற்கனவே முன்னேற்றம் கண்டுள்ளது. மனித



உயிரணுக்கள் சார்ந்த ஆராய்ச்சி, மனித உறுப்புகளின் செயல்பாடுகளை கணினி சிப் வடிவில் உள்ளமைக்கும் அதிநவீன மருத்துவத் தொழில்நுட்பமான ‘ஆர்கன்-ஆன்-சிப்’ (organon chip) தொழில்நுட்பங்கள், மனித திசு மாதிரிகள் மற்றும் கணினி வழி மாதிரியாக்க முறைகள் (computational methods) போன்றவை, விலங்குகளைப் பயன்படுத்தும் சோதனைகளைக் குறைத்து, அறிவியல் முன்னேற்றத்தை ஊக்குவிக்க சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன.

இந்தச் சூழலில், ஒன்றிய அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன்:

1.தற்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த வரைவு விதிகளைத் திரும்பப் பெற்று, எவரையும் சார்ந்திராத விலங்கு நல நிபுணர்கள், விஞ்ஞானிகள், கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் கலந்தாலோசித்து, விரிவான மறு ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

2. விலங்குகள் மீதான பரிசோதனைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு குழு’ (CCSEA) மூலம் மேற்கொள்ளப்படும் வலுவான சுதந்திரமான மேற்பார்வையை, தொடர்ந்து நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். குறிப்பாக, பெரிய விலங்குகளை உள்ளடக்கிய பரிசோதனைகள் மற்றும் கடுமையான வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளுக்கு இந்த மேற்பார்வை அவசியமாகும்.

3. வனவிலங்குகள் மற்றும் மனிதர்களோடு இணைந்து வாழும் விலங்குகளைப் பிடிப்பதற்கோ அல்லது ஆய்வகச் சோதனைகளில் பயன்படுத்துவதற்கோ வழிவகுக்கும் தெளிவற்ற விலக்குகளை நீக்குவதன் மூலமும், எந்தவொரு விதிவிலக்குகளும் துல்லியமாக வரையறுக்கப்பட்டு, சட்டப்பூர்வமாக நியாயப்படுத்தப்பட்டு, கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்வதன் மூலமும், அவற்றுக்கான பாதுகாப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

4. பொருத்தமான மயக்க மருந்து மற்றும் வலி நிவாரணம், மனிதாபிமான நிலைகள், பொருந்தக்கூடிய இடங்களில் மறுவாழ்வுத் தேவைகள் மற்றும் வசதிகளின் கண்காணிப்பு மற்றும் முன்னறிவிப்பில்லாத உள்ளிட்ட, திறமையான அமல்படுத்தக்கூடிய இறுதி ஆராய்ச்சி ஆய்வுகள் விலங்கு நலத் தரநிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

5. அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட விலங்குகள் அல்லாத ஆராய்ச்சி முறைகளின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டை ஊக்குவிக்க, இதற்கெனத் தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறுவனக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் அறிவியல் ரீதியாகச் சாத்தியமான இடங்களில் விலங்குகள் மீதான பரிசோதனைகளைக் குறைத்து, படிப்படியாக மாற்று முறைகளால் அவற்றை முழுமையாக மாற்றுவதற்கான தெளிவான தேசியத் திட்டம் ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

அறிவியல் முன்னேற்றமும் விலங்குகள் நலனும் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். ஒன்று மற்றொன்றிற்குத் தடையாக இருப்பதாக கருதப்படக் கூடாது. தற்போதுள்ள சட்டத்தின் கீழ் விலங்குகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பில் இடைவெளிகளை உருவாக்குவதற்குப் பதிலாக, நம் பிக்கையை ஏற்படுத்துவதற்காக, ஒழுங்குமுறை சீர்திருத்தமானது நெறிமுறை சார்ந்த ஆராய்ச்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும்.

முன்மொழியப்பட்ட விதிகளை அவற்றின் தற்போதைய வடிவத்திலிருந்து திரும்பப் பெறவும், விலங்குகளைப் பாதுகாப்பதோடு நம்பகமான மற்றும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் ஒரு கட்டமைப்பை உருவாக்க, வெளிப்படையான, ஆதார அடிப்படையிலான கலந்தாய்வு செயல்முறையைத் தொடங்கவும் தாங்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஜோசப் விஜய் ஆட்சியில் தொடரும் கொடூரம்:

கல்லூரி மாணவிக்குப் பாலியல் சீண்டல்!

த.வெ.க. நிர்வாகி அட்டூழியம்!

கன்னியாகுமரி, அக். 25 -

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர், நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் எம்.ஏ. இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். அவருடன் மூலச்சல் பகுதியைச் சேர்ந்த த.வெ.க பெண் நிர்வாகி ஒருவரும் அதே கல்லூரியில் படித்து வருகிறார். இவர்கள் இருவரும் கல்லூரித் தோழிகள் ஆவர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இருவரும் கல்லூரியிலிருந்து வீட்டிற்குச் செல்ல பேருந்திற்காக நின்றுகொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாகக் காரில் வந்த தக்கலை மருந்துக்கோட்டை பகுதியைச் சேர்ந்த த.வெ.க மத்திய மாவட்ட செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் என்பவர், காரை நிறுத்தி, “நானும் அந்த ஊருக்குத்தான் செல்கிறேன், வாருங்கள்” என்று கூறி மாணவிகள் இருவரையும் காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் த.வெ.க பெண் நிர்வாகியை மூலச்சல் பகுதியில் இறக்கிவிட்டுவிட்டு, காரில் இருந்த மற்றொரு மாணவியிடம் “நான் குலசேகரம் தான் செல்கிறேன், உங்களை அங்கு இறக்கிவிடுகிறேன்” எனக் கூறி அழைத்துச் சென்றுள்ளார். வழியில் மழை பெய்துகொண்டிருந்தபோது காரை நிறுத்தி, அந்த மாணவியிடம் அவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் நிலைகுலைந்த மாணவி, அவரைத் திட்டித்தாக்க முயன்றதுடன், காரிலிருந்து குதித்துத் தப்பிக்கவும் முயற்சி செய்துள்ளார். இதனால் பயந்துபோன கிறிஸ்டோபர், அந்தப் பெண்ணை அவரது வீட்டிற்கு அருகாமையில் இறக்கிவிட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

வீட்டிற்குச் சென்ற கல்லூரி மாணவி நடந்த சம்பவத்தைப் பெற்றோரிடம் கூறியுள்ளார். மேலும், தனது கல்லூரித் தோழியான த.வெ.க பெண் நிர்வாகியிடமும் இதுகுறித்து அழுது புலம்பியுள்ளார்.

தனது கட்சிக்காரரால் தனது தோழிக்கு நேர்ந்த பாலியல் தொல்லை குறித்துப் போலீசில் புகார் செய்வோம் எனக் கூறி, அந்த மாணவியைக் கொற்றிக்கோடு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவர் புகார் அளித்துள்ளார்.

போலீசார் இதுகுறித்து விசாரணை நடத்தி, கல்லூரி மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த கிறிஸ்டோபரைக் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். இத்தகவலை அறிந்து அங்கு வந்த த.வெ.க வழக்கறிஞர்களும் நிர்வாகிகளும், வழக்கைப் பதிவு செய்யவிடாமல் தடுத்து, அதை வெறும் புகார் மனுவாக மட்டும் மாற்றியுள்ளனர்.

மேலும், மாணமியை மிரட்டி அவரது புகாரையும் வாபஸ் பெறச் செய்துள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்த ‘சிங்கப்பெண்’ படையும் வரவில்லை. சிங்கமாய் வர வேண்டிய போலீசும் மௌனமாகிவிட்டது. இருப்பினும், தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும், குற்றவாளி மீது வழக்கப் பதிவு செய்து தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் அந்தப் பெண் உறுதியாக இருந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தக்கலை போலீசார், உதவுவது போல் நடித்துக் கல்லூரிப் பெண்ணிடம் உடல் ரீதியான பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட த.வெ.க நிர்வாகி கிறிஸ்டோபர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

த.வெ.க ஆட்சியில் இதுபோன்ற ஒரு கொடுமை குமரி மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள நிலையில், முதல்வரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறை, கட்டப்பஞ்சாயத்து செய்து இந்தப் பிரச்சினையை இல்லாமல் ஆக்க முயற்சித்த சம்பவம், குற்றவாளிக்கு உதவும் காவல்துறை மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சாத்தான்குளம் அருகே வீட்டுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல் வெறிச்செயல்!

பெண் வெட்டிக் கொலை! கணவர், மகன் காயம், இரண்டு மகள்கள் கடத்தல்!

தூத்துக்குடி, அக். 25 -

சாத்தான்குளம் அருகே முதலூரில் ஒரு வீட்டுக்குள் வெள்ளிக்கிழமை அதிகாலை, ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல், அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்களை வீட்டிற்குள் புகுந்து சரமாரியாக வெட்டியதில் மேரி ரெஜிலா என்ற பெண் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது கணவர் முத்து கிருஷ்ணன், மகன் பிளசெட் ராஜா ஆகியோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மகள்கள் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், சில மணி நேரத்திற்கு பிறகு அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடு புகுந்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை அடுத்த முதலூர் சேர்ந்தவர் முத்துகிருஷ்ணன் (50). இவரது மனைவி மேரி ரெஜிலா (39). இந்த தம்பதியினருக்கு பிளெஸ்ஸி (15), பிரின்ஸா பாப்பா (14) மற்றும் பிளெசெட் ராஜா (10) என மூன்று குழந்தைகள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தங்கள் வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருந்த நிலையில், நள்ளிரவில் ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல், அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்களை வீட்டிற்குள் புகுந்து சரமாரியாக வெட்டியதில் மேரி ரெஜிலா என்ற பெண் பலியானார். அவரது கணவர் முத்துகிருஷ்ணன், மகன் பிளசெட் ராஜா ஆகியோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மகள்கள் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து தட்டார்மடம் போலீசார் வழக்குப் பதிவு செய்து, சிறுமிகள் கடத்தப்பட்டார்களா என்பது குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் கடத்தப்பட்ட சிறுமிகளை மீட்கவும், கொலையாளிகளை பிடிப்பதற்கும் தனிப்படை அமைக்கப்பட்டு போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். முதற்கட்ட விசாரணையில் இது குடும்பத் தகராறு காரணமாக நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்த நிலையில், சில மணி நேரத்திற்கு பிறகு சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

வீடு புகுந்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முரசொலியில் பணிபுரியும்

சி.காசி இல்ல மணவிழா!

இன்று நடைபெறுகின்றது!

சென்னை, அக். 25 -

முரசொலியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் சி.காசி - கே.நளினி ஆகியோரின் புதல்வர் கே.விஸ்வநாத் - எம்.லாவண்யா ஆகியோரின் மணவிழா இன்று (25.10.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணிக்கு, சென்னை, திருவள்ளூர் நெடுஞ்சாலை, திருமழிசையில் அமைந்துள்ள ஜி.கே.ஆர். மஹாலில் நடைபெறுகின்றது.



முன்னதாக மணவிழா வரவேற்பு நேற்று (24.10.2026 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

இம்மண விழாவில் கழக முன்னணியினர், உற்றார், உறவினர் கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை வி. சந்திரன், சி.லதா, சி.பன்னீர்செல்வம், சி.ஓவியா டி.பழனி, பி.ரம்யா, எம். விமலா, முனுசாமி, எம். பாலாஜி, ஆகியோர் வரவேற்கின்றனர்.